<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை</u>

முன்னிலை: **திருமதி.*K.*அறிவொளி**, *M.A.,M.L.,*

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

2026-ம் வருடம் மார்ச் மாதம் 18-ம் நாள் புதன் கிழமை

**<u>சிறப்பு அமர்வு வழக்கு எண்:76/2024</u>**

*<u>(CNR No.TNSV01003891/2024)</u>*

*****

(மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.18/2022, உலகம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.06/2022)

தமிழ்நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,
உலகம்பட்டி காவல் நிலைய
குற்ற எண்.06/2022 . . . குற்ற முறையிடுபவர்

/எதிரிடை/

1. பாரதிராஜா,
   த/பெ.ஹரிதாஸ்,
   மாந்தன்குடிபட்டி,
   சிங்கம்புணரி தாலுகா,
   சிவகங்கை மாவட்டம்.

2. வினோத்குமார்,
   த/பெ.ராஜேந்திரன்,
   சந்தைபேட்டை,
   பொன்னமராவதி,
   புதுக்கோட்டை மாவட்டம். . . . எதிரிகள்

குற்றம் முறையிடுபவர் : தமிழ்நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,
உலகம்பட்டி காவல் நிலைய
குற்ற எண்.06/2022

குற்றம் சாட்டப்பட்டவர்கள் : 1. பாரதிராஜா,
த/பெ.ஹரிதாஸ்,
மாந்தன்குடிபட்டி,
சிங்கம்புணரி தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.

2. வினோத்குமார்,
த/பெ.ராஜேந்திரன்,

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:03:15 +0530

சந்தைபேட்டை,
பொன்னமராவதி,
புதுக்கோட்டை மாவட்டம்.

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரிகள் மீது இதச பிரிவு 379 உ/இ பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ். |
| எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரிகள் மீது இதச பிரிவு 379 உ/இ பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் வாதுரை | : | குற்றவாளிகள் இல்லை. |
| தீர்மானம் | : | ***முடிவில்,*** எதிரிகள் இதச பிரிவு 379 உ/இ பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கு கற்றறிந்த மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிங்கம்புணரி முன்னிலையில் முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.18/2022 என்று கோப்பில் எடுக்கப்பட்டு கு.வி.மு.ச 209 பிரிவின் கீழ் மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் 12.03.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.*A*.அழகர்சாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.*G*.குணசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் . . .

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:03:23 +0530

18.03.2026
முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**<u>தீர்ப்புரை-</u>**

இவ்வழக்கில், கடந்த 23.02.2022-ம் தேதி 20.00 மணிக்கு 1-வது எதிரி தனக்குச் சொந்தமான TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியில், 2-வது எதிரி வாகனத்தை ஓட்டி எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும் நோக்கத்தில் திருட்டுத்தனமாக ரூ.1916/- மதிப்புள்ள 3 யூனிட் கிராவல் மண்ணை திருடி அள்ளிச் சென்று அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், எனவே எதிரிகள் இதச பிரிவு 379 உ/இ பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ் தண்டிக்கத்தக்கவர்கள் என்று உலகம்பட்டி காவல்நிலைய காவல் ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரிகள் கற்றறிந்த மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிங்கம்புணரி அவர்கள் முன்பாக முன்னிலையான போது, எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டும், எதிரிகள் மீதான குற்றம் சிவகங்கை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கப்படத்தக்கது என்பதால் கு.வி.மு.ச. பிரிவு 209-ன் கீழ் வழக்குக் கோப்பு இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**3)** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது அவர்கள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 379 உ/இ பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ் குற்றம் புரிந்திருக்கக்கூடும் என்று அனுமானிக்கத்தக்கக் காரணம் இருக்கின்றது என்று முடிவு செய்து, கடந்த 02.07.2025 அன்று எதிரிகள் மீது இதச பிரிவு 379 உ/இ பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழான குற்றத்தைப் பற்றி

எழுத்து மூலமான குற்றச்சாட்டு வனைந்து கு.வி.மு.ச.பிரிவு 228(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளிடம் குற்றச்சாட்டை தமிழில் படித்துக்காட்டி விளக்கிக் கூறியபோது எதிரிகள் இதச பிரிவு *379* உ/இ பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழான குற்றத்தை மறுத்துரைத்து, தாங்கள் குற்றவாளி இல்லை என்று கூறி விசாரணை கோரினார்கள். எனவே, இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச. பிரிவு 231-ன் கீழ் அரசுத் தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

**4)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வலையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களும் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:-**

*i)* அ.சா.1 சேதுராமன் தனது சாட்சியத்தில், கடந்த 23.02.2023-ம் தேதி உலகம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது மாலை 05.00 மணியளவில் தானும், தலைமை காவலர் சரவணன், முதுநிலை காவலர் பிரபாகரன் ஆகியோர் ரோந்து பணியில் ஈடுபட்ட போது ஆரணிபட்டி, மாந்தகுடிபட்டி கிராமம் அருகில் சென்ற போது TN 50 F 3781 என்ற டிப்பர் லாரியை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி சோதனை செய்த போது சுமார் 3 யூனிட் அளவுள்ள கிராவல் மண் இருந்தது என்றும், தாங்கள் வண்டியை நிறுத்தி விசாரித்த போது வண்டி ஓட்டுநர் பொன்னமராவதியைச் சார்ந்த வினோத்குமார் என பெயரைச் சொல்லிவிட்டு வண்டியை நிறுத்தி ஓடிவிட்டார் என்றும், அதன் பின் வண்டியை ஓட்டி வந்தவர் வினோத்குமார் என்றும் வண்டியின் உரிமையாளர் மாந்தகுடிபட்டியைச் சார்ந்த பாரதிராஜா என்று தெரிந்து கொண்டும் மேற்படி வண்டியுடன் காவல்

நிலையம் சென்று தான் எழுத்து மூலமான புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகார் அ.சா.ஆ.1 என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப் படத்திலுள்ள TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி தான் தான் சம்பவ இடத்தில் கைப்பற்றி நிலையம் கொண்டு வந்த வாகனம் சா.பொ.1 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*ii)* அ.சா.2 சரவணன் தனது சாட்சியத்தில், கடந்த 23.02.2023-ம் தேதி உலகம்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியில் இருந்தபோது மாலை 05.00 மணியளவில் தானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் சேதுராமன், முதுநிலை காவலர் பிரபாகரன் ஆகியோர் ரோந்து பணியில் ஈடுபட்ட போது ஆரணிபட்டி, மாந்தகுடிபட்டி கிராமம் அருகில் சென்ற போது TN 50 F 3781 என்ற டிப்பர் லாரியை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி சோதனை செய்த போது சுமார் 3 யூனிட் அளவுள்ள கிராவல் மண் இருந்தது என்றும், தாங்கள் வண்டியை நிறுத்தி விசாரித்த போது வண்டி ஓட்டுநர் பொன்னமராவதியைச் சார்ந்த வினோத்குமார் என பெயரைச் சொல்லிவிட்டு வண்டியை நிறுத்தி ஓடிவிட்டார் என்றும், அதன் பின் வண்டியை ஓட்டி வந்தவர் வினோத்குமார் என்றும் வண்டியின் உரிமையாளர் மாந்தகுடிபட்டியைச் சார்ந்த பாரதிராஜா என்று தெரிந்து கொண்டும் வண்டி ஓட்ட தெரிந்த காவலர் பிரபாகரன் என்பவர் உதவியுடன் காவல் நிலையத்திற்கு வந்து சேர்ந்தோம் என்றும், மேற்படி தங்களால் கைப்பற்றப்பட்ட TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி உரிய கைப்பற்றுதல் மகஜரில் தானும், காவலர் பிரபாகரன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், கைப்பற்றுதல் மஜரிலுள்ள 1-வது சாட்சி கையெழுத்து தன்னுடையாது தான் என்றும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:03:48 +0530

*18.03.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

*iii*) அ.சா.3 பரமசிவம் தனது சாட்சியத்தில், கடந்த 24.02.2022-ம் தேதி காலை 7 மணியளவில் பொன்னமராவதியிலிருந்து படமிஞ்சி சாலையில் மாந்தகுடி செல்லும்போது தானும், தன் நண்பர் வெள்ளைச்சாமியும் செல்லும் வழியில் மாந்தகுடி குப்பைக்கிடங்கு அருகில் உலகம்பட்டி காவல் நிலையத்தைச் சார்ந்த காவலர்கள் வழக்கு தொடர்பான இடத்தை பார்த்து மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும், வெள்ளைச்சாமியும் கையெழுத்து போட்டதாகவும், பார்வை மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையெழுத்து தன்னுடையது தான் என்றும், மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*iv*) அ.சா.4 மாணிக்கம் தனது சாட்சியத்தில், கடந்த 2022-ம் ஆண்டில் உலகம்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றிய போது கடந்த 23.02.2022-ம் தேதி இரவு 21.00 மணியளவில் தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது ரோந்து பணிக்கு சென்ற சிறப்பு சார்பு ஆய்வாளர் சேதுராமன், தலைமைக்காவலர் சரவணன், முதல்நிலை காவலர் பிரபாகரன் ஆகியோர் நிலையம் வந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் சேதுராமன் என்பவர் எழுத்து மூலமாக கொடுத்த புகாரைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 6/2022 இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act-படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 தயார் செய்ததாகவும், மேற்படி முதல் தகவல் அறிக்கையை உடனடியாக உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவிட்டு, வழக்கு கோப்பை காவல் ஆய்வளரின் பார்வைக்கு வைத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

*v*) அ.சா.5 கலாராணி தனது சாட்சியத்தில், கடந்த 23.02.2022-ல் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், உலகம்பட்டி காவல் நிலையத்தில்

காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்று நிலைய பொறுப்பில் சார்பு ஆய்வாளராக இருந்த மாணிக்கம் என்பவர் நிலைய குற்ற எண்.6/2022-ல் இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act-படி பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 24.02.2022-ம் தேதி காலை 07.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வெள்ளைச்சாமி, பரமசிவம் ஆகியோர்களை சாட்சிகளாக வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 என்றும், அன்றைய தினமே வழக்கின் புகார்தாரரான சார்பு ஆய்வாளர் சேதுராமன், உடனிருந்த காவலர் சரவணன் மற்றும் காவலர் பிராபகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், கடந்த 08.03.2022-ம் தேதி மணலின் மதிப்புக் கேட்டு உதவி பொறியாளர் வளத்துறை அகிலாதேவி என்பவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து கடந்த 11.03.2022-ல் மணல் மதிப்பு குறித்த சான்று பெற்றதாகவும், மேற்படி சான்று அ.சா.ஆ.6 என்றும், அன்றையே தினமே அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், கடந்த 25.08.2022-ல் சிங்கம்புணரி வட்டாட்சியர் அவர்களிடம் கைப்பற்றிய மணலை ஒப்படைத்து அதற்கான ரசீதை பெற்றதாகவும், மேற்படி ரசீது அ.சா.ஆ.7 என்றும், அன்றே அவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றதாகவும், இவ்வழக்கில் TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியை உரிய சொத்து படிவம் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி படிவம்-91 அ.சா.ஆ.8 என்றும், மேலும் இவ்வழக்கில் கனிம வளத்துறையை சார்ந்த அகிலாதேவி, வட்டாட்சியர் கயல்செல்வி, முதல் தகவல் அறிக்கை தயாரித்த மாணிக்கம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கில் கடந்த

25.08.2022-ம் தேதியில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயாரித்து உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 என்றும், அன்றைய தினமே இவ்வழக்கில் இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act-படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், மேலும் இவ்வழக்கில் குவிமுச பிரிவு 200-படியான தனி நபர் புகாரை கடந்த 06.04.2022-ல் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கையில் தாக்கல் செய்ததாகவும், மேற்படி கு.வி.மு.ச. பிரிவு 200-படியான தனி நபர் புகார் அ.சா.ஆ.10 என்றும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுத் தரப்புச் சாட்சிகளின் சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

**6)** அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்குப் பாதகமாக இருக்கக்கூடிய பகுதிகள் பற்றி எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)-ன் கீழ் தமிழில் விளக்கிக் கூறி வினவிய போது, எதிரிகள் அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் தங்களுக்குப் பாதகமாக தோன்றக் கூடிய பகுதிகளைப் பொய் என மறுத்துள்ளார்கள். மேலும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறப்பட்டதை தொடர்ந்து, எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7)** தற்போது இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் எதிரிகளுக்கு எதிரான 379 IPC r/w 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:04:12 +0530

18.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**பிரச்சனைக்குரிய தீர்வு:-**

**8)** இவ்வழக்கில், கடந்த 23.02.2022-ம் தேதி 20.00 மணிக்கு 1-வது எதிரி தனக்குச் சொந்தமான TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியில், 2-வது எதிரி வாகனத்தை ஓட்டி எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும் நோக்கத்தில் திருட்டுத்தனமாக ரூ.1916/- மதிப்புள்ள 3 யூனிட் கிராவல் மண்ணை திருடி அள்ளிச் சென்று அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதாக எதிரிகள் மீது 379 IPC r/w 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**9)** எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையில் அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வலையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளில் அ.சா.1 சேதுராமன் சிறப்பு சார்பு ஆய்வாளர் சம்பவம் பற்றியும், புகார் கொடுத்தது பற்றி கூறும் சாட்சி, அ.சா.2 சரவணன், தலைமைக் காவலர், கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பமிட்டது பற்றி கூறும் சாட்சி, அ.சா.3 பரமசிவம் பார்வை மகஜர் பற்றி கூறும் சாட்சி, அ.சா.4 மாணிக்கம், சார்பு ஆய்வாளர் அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தது பற்றி கூறும் சாட்சி, அ.சா.5 கலாராணி வழக்கு கோப்பை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகளை விசாரணை செய்து, கிராவல் மண்ணிற்கு மதிப்பீடு பெற்று, எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் ஆவார்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:04:19 +0530

*18.03.2026* முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**10)** அரசுத் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் கடந்த 23.02.2022-ம் தேதி 20.00 மணிக்கு 1-வது எதிரி தனக்குச் சொந்தமான TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியில், 2-வது எதிரி வாகனத்தை ஓட்டி எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும் நோக்கத்தில் திருட்டுத்தனமாக ரூ.1916/- மதிப்புள்ள 3 யூனிட் கிராவல் மண்ணை திருடி அள்ளிச் சென்று அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

**11)** எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட கிராவல் மண் எந்த இடத்தில், எந்த சர்வே எண்ணில், யாருக்குச் சொந்தமான பகுதியில் எடுக்கப்பட்டது என்பது குறித்து அ.சா.1 புகாரிலோ, தனது முதல்விசாரணையிலோ சொல்லவில்லை என்றும், எதிரிகள் TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியில் அள்ளிக் கொண்டு வந்த கிராவல் மண் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதற்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், இவ்வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட சான்று பொருட்களான மண் வெட்டி மற்றும் சாந்துசட்டி கைப்பற்றப்படவில்லை என்றும், இவ்வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும், எதிரிகளுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும்,

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:04:27 +0530

புள்ளிவிபர கணக்கிற்காக எதிரிகள் மீது இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் அரசு அனுமதியில்லாமல் எதிரிகள் TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியில் கிராவல் மண்ணை அள்ளிக் கொண்டு வந்தார்கள் என்பது பற்றியும் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இவ்வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்று வாதிட்டார்.

**12)** இவ்வழக்கில், எதிரிகள் தரப்பில் அ.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது அவர் தனது குறுக்கு விசாரணையில் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் வீடுகள் இல்லை என்றும், அந்த இடத்தில் மின்விளக்கு வசதிகள் இல்லை என்றும், இவ்வழக்கு தொடர்பாக தனி நபர் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும், சம்பவம் நடந்தபோது இருட்டாக இருந்தது என்றும், அந்த இடத்தில் தனி நபர் யாரும் இல்லை என்றும், பார்வை மகஜர் எழுதியது யார் என்று ஞாபகமில்லை என்றும், சம்பவ இடத்தில் வைத்து புகைப்படம், வீடியோ எடுக்கவில்லை என்றும், வண்டியில் அள்ளப்பட்டிருந்த கிராவல் மண் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்ற விவரம் விசாரணையில் சொல்லவில்லை என்றும், தான் தனிப்பட்ட முறையில் இவ்வழக்கு தொடர்பாக வருவாய் துறை, கனிம வள துறைக்கு அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். அதேபோல் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் வீடுகள் இல்லை என்றும், அந்த இடத்தில்

மின்விளக்கு வசதிகள் இல்லை என்றும், இவ்வழக்கு தொடர்பாக தனி நபர் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும், ஓட்டுநர் தன் பெயரை மட்டும் சொல்லிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார், எந்த திசையில் ஓடினார் என்று தனக்குத் தெரியாது என்றும், தாங்கள் பிடிக்க முயற்சித்தோம் ஆனால் முடியவில்லை என்றும், அந்த இடத்தில் தனி நபர் யாரும் இல்லை என்றும், அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜரில் தான் கையொப்பம் செய்த இடத்திலோ, வேறு எந்த இடத்திலோ தேதிகள் குறிப்பிடப்படவில்லை என்றும், அ.சா.ஆ2 கைப்பற்றுதல் மகஜர் எங்கு வைத்து, எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் குப்பைக் கிடங்கு இருந்த இடத்தில் தெருவிளக்கோ, மின்வசதியோ, அருகில் வீடுகளோ இல்லை என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில் காவல் நிலையத்திற்கு புகாருடன் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் வாகனத்தை யார் மூலமாக கொண்டு வரப்பட்டது என்ற விவரம் சொல்லப்படவில்லை என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

**13)** மேலும் அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில் அ.சா.ஆ.1 புகாரில் எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றும், தனது விசாரணையில் எதிரிகளின் பெயர் யார் மூலம் தெரிய வந்தது என்று விளக்கிச் சொல்லவில்லை என்றும், சார்பு ஆய்வாளர் மூலம் பெறப்பட்ட புகாரில் புகாருடன் ஆவணங்கள் எதுவும் சேர்ந்து கொடுக்கப்பட்டதாக தெரிந்து கொள்ளவில்லை என்றும், இவ்வழக்கில் அ.சா.1 சிறப்பு சார்பு ஆய்வாளர் சேதுராமன் பணி குறித்து தனியான குறிப்பேடு எதுவும் பராமரிக்கப்பட்டு அது வழக்கு கோப்பில்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:04:39 +0530

காட்டப்படவில்லை என்றும், அன்றைய தினம் ரோந்து பணியின் போது வேறு எதுவும் குற்ற நடவடிக்கை குறித்து வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், வழக்கு சம்பந்தப்பட்ட கிராவல் மண் எந்த இடத்தில், எவ்வாறு அள்ளப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட கிராவல் மண் யாருக்கு விற்பணைக்காக கொண்டு செல்லப்பட்டது என்ற விவரம் தெரிந்துகொள்ளவில்லை என்றும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட கிராவல் மண் எந்த இடத்தில், எந்த சர்வே எண்ணில், யாருக்குச் சொந்தமான பகுதியில் எடுக்கப்பட்டது என்பது குறித்து விசாரணையில் தெளிவாக சொல்லவில்லை என்றும், புகைப்படங்களில் மண் உள்ளது போன்று தெளிவாக காட்டப் படவில்லை என்றும், இவ்வழக்கில் மண் அள்ளிய சம்பவத்தை பார்த்ததற்கான தனி நபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

**14)** இந்நிலையில் 23.02.2022-ம் தேதி 20.00 மணிக்கு 1-வது எதிரி தனக்குச் சொந்தமான TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியில், 2-வது எதிரி வாகனத்தை ஓட்டி எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும் நோக்கத்தில் திருட்டுத்தனமாக ரூ.1916/- மதிப்புள்ள 3 யூனிட் கிராவல் மண்ணை திருடி அள்ளிச் சென்று அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு எதிரிகள் மேற்படி வாகனத்தில் எந்த சர்வே எண்ணில், யாருக்குச் சொந்தமான இடத்தில் இருந்து கிராவல் மண்ணை அள்ளிக் கொண்டு வந்தார்கள் என்பதை அ.சா.ஆ.4-ஆன முதல் தகவல் அறிக்கையிலும் சொல்லப்படவில்லை என்பதையும், மேற்படி வாகனத்தின் மூலம் அள்ளிவரப்பட்ட கிராவல் மணல் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதற்கும்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:04:46 +0530

*18.03.2026*

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

அரசு தரப்பில் யாதொரு ஆவணமும் முன்னிடப்படவில்லை.

**15)** இந்நிலையில், இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ளதுபோல் எதிரிகள் அரசு அனுமதியில்லாமல் TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியில் 3 யூனிட் கிராவல் மண்ணை அள்ளிச் சென்றார்கள் என்பது குறித்து சந்தேகம் எழுகிறது என்று கூறும் எதிரிகள் தரப்பு கூற்று எளிதில் நிராகரிப்பதற்கில்லை. மேலும் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்பதையும் அறிய முடிகிறது. அதிலும் குறிப்பாக தனிநபர்கள் யாரும் தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. இந்நிலையில், இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறும் எதிரிகள் தரப்பு கூற்று எளிதில் நிராகரிப்பதற்கில்லை.

**16)** எனவே, மேலே விவாதிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஒருங்கிணைந்து சீர்தூக்கி பார்க்கும்போது எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்படவில்லை என்று தீர்மானித்து அதனடிப்படையில் இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்பதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

***முடிவில்,*** எதிரிகள் 379 IPC r/w 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:04:53 +0530

18.03.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் பி.ஆர்.எண்.67/2025-ல் அ.சா.பொ.1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி இந்நீதிமன்ற Crl.M.P.No.1566/2022-ல் 28.04.2022-ம் தேதியன்று பிறப்பித்த உத்தரவின்படி அதன் உரிமையாளர் 1-வது எதிரியான பாரதிராஜா, த/பெ.ஹரிதாஸ் என்பவர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றிருப்பதால், மேற்படி வாகனத்தை மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்போ அல்லது மேல்முறையீடு இருப்பின் அதன் முடிவிற்கு பின்போ அதன் உரிமையாளரிடம் உரிய ஆவணங்களின் பேரில் நிரந்தரமாக ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும், இவ்வழக்கு குற்றச்சாட்டு குறித்து வைப்புத் தொகை ஏதேனும் செலுத்தியிருந்தால் உரிய நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக் கொள்ளவும், எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணை முறிகள் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, பின்பு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதன்பின்பு என்னால் பிழை திருத்தப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:05:00 +05'30'

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:-</u>
<u>திருவாளர்கள்:</u>

| அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை. | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் பற்றிய விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | சேதுராமன்<br>சிறப்பு சார்பு ஆய்வாளர். | சம்பவம் மற்றும் புகார் கொடுத்தது பற்றி கூறும் சாட்சி. |

| | | |
|---|---|---|
| அ.சா.2 | சரவணன்,<br>தலைமைக் காவலர் | கைப்பற்றுதல் மகஜர் சாட்சி. |
| அ.சா.3 | பரமசிவம் | பார்வை மகஜர் சாட்சி. |
| அ.சா.4 | மாணிக்கம்<br>காவல் ஆய்வாளர் | சிறப்பு சார்பு ஆய்வாளர் கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு கோப்பை மேல்விசாரணைக்கு காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.5 | கலாராணி,<br>காவல் ஆய்வாளர். | வழக்கு கோப்பை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரித்து எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றி கூறும் சாட்சி. |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:-**

| **சான்றாவணங்களின் வரிசை.** | **சான்றாவணங்களின் விபரம்.** | **சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம்.** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார். | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | கைப்பற்றுதல் மகஜர். | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜர். | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | மணல் மதிப்பு சான்று. | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | மணல் ஒப்படைத்ததற்கான ரசீது. | அ.சா.5 |
| அ.சா.ஆ.8 | படிவம்-91. | அ.சா.5. |
| அ.சா.ஆ.9 | சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா.5. |
| அ.சா.ஆ.10 | தனிநபர் புகார் (200 Cr.P.C.). | அ.சா.5. |

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:05:08 +0530

18.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**அரசுத் தரப்பு சான்று பொருள்:-**

| **சான்று பொருட்களின் வரிசை** | **சான்று பொருட்களின் விபரம்.** | **சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம்.** |
|---|---|---|
| அ.சா.பொ.1 | TN 50 F 3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி. | அ.சா.1 |

**எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-** இல்லை.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.18 18:05:13 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை
**சிறப்பு அமர்வு வழக்கு**
**எண்.76/2024**
வரைவு - சீரான / தீர்ப்புரை
நாள்:18.03.2026

18.03.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.